REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தனி இதழ்
விலை அணு 1
(7 புதிய காசுகள்)

சென்னை: ஆனி 23உ ஞாயிறு (7—7—57) ★ வெளியூர்: ஆனி 24உ திங்கள் (8—7—57)

# சமதர்மமா, சமயதர்மமா-காங்கிரஸ் கையாளுவது எது?

## நிதி அமைச்சருக்குக் கட்டுக்கடங்கா நிலையில் 'பட்ஜெட்' சென்றுவிட்டதா?

## ஏட்டில் திட்டம் தீட்டிப் பயன் என்ன? இயந்திரத்தை அல்லவா பழுது பார்க்க வேண்டும்?

## எண்ணத்தைக் கருதாமல் எண்ணிக்கையைக் கவனிப்பானேன்?

## வரவு-செலவு திட்ட விவாதத்தில் அண்ணு

"சட்டங்கள் நிறைவேற்றினுல் மாத்திரம் போதாது; இதை நடத்துகின்ற நிர்வாக இயந்திரம் பழுதுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பல இடங்களில் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்று பல உறுப்பினர்கள் குறைபட்டார்கள். மடாலயங்களின் நிலத்தை உழவர்களுக்கு அளித்து, பத்துப் பதினைந்து ஆண்டுகள் ஆகியும்கூட இப்போதும் அவர்களுக்குப் பல கஷ்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள் என்று அரசாங்கத்தைக் கவனப்படுத்துகின்ற வகையில் குறிப்பிட்டார்கள். இவைகளையெல்லாம் பார்க்கும்போது, 'ஐயோ, இவர்களெல்லாம் நம் பக்கத்தில் இருக்கவேண்டியவர்களோ; தேர்தலில் பிரிந்துபோய் விட்டார்களோ?' என்று எண்ணக்கூடிய நிலையில் இருக்கிறது.

"இவை தவிர, 'வைத்திய விடுதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை; கிராமங்களுக்குச் சரியான பாதை, போக்குவரத்து செய்து கொடுக்கப்படவில்லை; மின்சார கெடுபிடி அதிகமாக இருக்கிறது; இலங்கையிலிருந்து ஏற்படுகின்ற கஷ்டங்கள்; இவைகளுக்கெல்லாம் நிவாரண வழிவகைகள் வேண்டும்' என்று இன்று காலையிலிருந்து பல உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

"இவைகளையெல்லாம் நாங்கள் உங்களைப் பார்த்துக் கேட்கும்போது, நீங்கள் கோபப்படுவானேன்—வருத்தப்படுவானேன்—ஆத்திரப்படுவானேன்? சொந்தக் கட்சியைச் சார்ந்தோர் குறைகளைக் கூறும்போது எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் மட்டும் ஏன் கூறக்கூடாது? நாங்கள் இங்கு வந்திருப்பது ஆளும்கட்சிக்கு 'லாலி' பாடுவதற்காக அல்ல; குற்றங்களை எடுத்துக் கூறவேதான் வந்திருக்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. நாங்கள் இங்கிதம் தெரியாமல் நடந்து கொள்ளவில்லை"

*—1957-58-ம் ஆண்டிற்கான சென்னை மாநில சர்க்காரின் வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது 4-7-57 அன்று, சட்ட சபையில் அண்ணு அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—*

"நமது மாநிலத்தின் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்காக வைத்திருக்கிற வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்து பார்க்கும்பொருட்டு எல்லாக் கட்சிகளுக்கும் இருப்பதைப் போலவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அக்கறை இருப்பதிலேயும், அதிலே கலந்து கொள்ளுகிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதிலேயும் உண்மையிலேயே மகிழ்ச்சியெய்துகிறேன்.

"இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னுல் இந்த வரவு-செலவுத் திட்டம் எந்த நேரத்திலே நம்மிடத்தில் தரப்படுகிறது என்பதை ஆராய்வது, அதனுடைய தன்மைகளை உண்மையில் புரிந்துகொள்வதற்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி ஆராய்வதில் நமக்குச் சாதகமான சூழ்நிலைகள் மொத்தம் எவ்வளவு இருக்கின்றன?

"இயற்கை நமக்கு இந்த ஆண்டு உதவிபுரிந்திருக்கிறது என்பதை நிதியமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துள்ளார்கள்.

"இந்த நாட்டு மக்களிடையே எத்தனையோ மாதிரியான மனக் குமுறல்கள் இருந்தாலும், இந்த நிமிடம்வரை சட்டங்களுக்கு அடங்கி நடக்கின்ற பொறுப்புள்ள குடிமக்களாக இருந்துகொண்டு, கேட்கின்ற வரிகளை எல்லாம் தருகிருர்கள்! தீட்டப்படுகின்ற சட்டங்களுக்கு மதிப்பளிக்கிருர்கள்! இது நல்ல சூழ்நிலைதான்.

"அதேபோன்று, நம் நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளில் பெரும்பாலானவை, அரசாங்கத்தின் நிர்வாகத்திலே—திட்டங்களிலே—கொள்கைகளிலே எந்த மாதிரி குறைபாடுகள் இருந்தாலும், வலிவோ பொலிவோ குறைந்திருந்தாலும் அந்தப் பொலிவினை அவர்கள் இழந்துவிடுகின்ற நேரத்திலே நல்ல வண்ணப் பூச்சிகளாகக் காட்சியளிக்கும்படி செய்து, இன்றையத் தினம் ஆதரவு அளித்து வருகின்றன!

"இதுமட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டம் முழுவதும்பார்த்துப் பாடம் பெறக்கூடியவகையில் நல்ல திறமை வாய்ந்த நிர்வாக இயந்திரம் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

"ஆனுல்—'ஆனுல்' என்ற அருவருப்பான சொல்லை நானுகத் தேடிக் கொள்ளவில்லை; அது தானுகவே தூரத்திக்கொண்டு வருகிறது.

"ஆனுல், இவ்வளவு நல்ல சூழ்நிலைகளுக்குப் பிறகும் விலைவாசிகள் ஏறியிருக்கிறது! வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது! பற்றுக்குறை எல்லாத் துறைகளிலும் தூரத்திக் கொண்டிருக்கிறது! அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள், அரசாங்கத் துணை அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள் அத்தனை பேர்களும் இன்றையதினம் பற்றுக்குறையோடுதான் இருக்கிருர்கள். அதைப் போக்க, நல்ல சூழ்நிலை நம்மிடம் உருவாக்கப்படவில்லை! இந்நிலையில், 'அலுவலகத் துறையில் உள்ளவர்கள் அரசாங்கத்தின் உதவியைப்பெற்றிருக்கிருர்கள்,' என்று வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறதே, அப்படி அலுவலகத் துறையிலுள்ள எவரும் முழுமனத் திருப்தியோடு இல்லை என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார் என்றே கருதுகிறேன். நான் இதை நினைவூட்டுவது அவர்கள் பேரில் நான் வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும் அதிகப்படுத்திக்கொள்வதற்காக தவிர, குறைகூறிக் கொள்ள அல்ல!

"குறை கூறுவதற்கு இருக்கின்ற பல காரியங்களைப் பற்றி இந்த மன்றத்தில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"இம்மன்றம் ஒவ்வொருவருடைய பேச்சுத் திறமையையும் காட்டிக்கொள்வதற்காகக் கூட்டப்படவில்லை. அது அவசியமுமில்லை. நாட்டில் மக்கள் மன்றத்தில் ஒவ்வொருவருக்கும் அதற்கான மதிப்பு ஏற்கனவே நிலைநாட்டப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தைப் பற்றிக் கூறவும், அதற்குத் திரும்பப் பதில் அளிப்பதும்—இதுதான் இங்கே நடந்தது. ஆனுல் இவ்விதம் இருத்தல் கூடாது என்று மன்ற உறுப்பினர்களுக்கும் எனக்கும் நானே கவனமூட்டிக்கொள்ளுகிறேன்.

"எதிர்க் கட்சியிலுள்ளவர்கள், காரணங்களைக்காட்டிமுறைப்படி குற்றம் சாட்டுகிருர்கள்; காரணம், அவர்கள் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, அதன்படி நின்று தக்க ஆதாரங்களுடனும் கட்டுப்பாடுடனும், கண்ணியத்துடனும் எடுத்துரைப்பதற்குள்ள தகுதி எதிர்க் கட்சிக்காரர்களிடம்—குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடம் இருக்கிறது!

"இந்தியத் துணைக்கண்டத்தின் மற்ற சட்டசபைகளில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குக் கவனமூட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்குமுன்னுல் பத்திரிகைகளில் பார்த்தோம்; தோற்றுப்போன ஒருவர் கவர்னராகப் பதவி பெற்று சட்டசபையில் வந்து ஆற்றிய உரையை எதிர்த்துப் பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது!

"நம்முடைய மாநிலத்தில் பெருமையாகவும் திறமையாகவும் நிர்வாகம் நடத்திவந்த கவர்னர் பிரகாசா அவர்கள், பம்பாய் சட்டமன்றத்தில் தன் உரையை நிகழ்த்தச் சென்ற நேரத்தில், இரு மொழி மாநிலம் வேண்டாம்' என்ற ஒரு காரணத்தைக் காட்டி, சட்டசபையில் பெரிய அமளி ஒன்று நடைபெற்றிருக்கிறது.

"எல்லாவற்றையும் விட மேலாக, இராஜஸ்தான் சட்டசபையில் திரிலோக் சிங் என்பவரை, சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தார்கள்; இதை எதிர்த்து ஒருவர் சபாநாயகர் வெளியே போயிருந்த சமயம் பார்த்து சபாநாயகருடைய இருப்பிடத்திலேறி உட்கார்ந்துகொண்டு பிடிவாதமாக, 'அகலமாட்டேன்' என்ருர்.

"இத்தனை சம்பவங்களெல்லாம் மற்ற மற்ற சட்டசபைகளில் நடைபெறும் இந்நேரத்தில், இங்கு, கட்டுப்பாடுடனும் கண்ணியத்தோடும், பாசத்தோடும் அடக்கத்தோடும், கனிவுடனும் நடந்துகொள்ளும் எங்களுடைய தன்மையை நீங்கள் உணர மறுக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; எங்களைப் பற்றிக் கண்டித்துக் குறையும் கூறிவருகிறீர்களென்ருல், நீங்கள் எங்களை நான் முன் குறிப்பிட்ட அந்தப் பாதைக்குத் தூரத்துகிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

"நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தின் அடிப்படையில் நின்றுதான் பணியாற்றிவருகிறோம் துள்ளோம்.

"நீங்கள் ஆணவமாக வேண்டுமானுல் கருதிக் கொள்ளலாம்! நாங்கள் இந்த சபைக்கு வந்தது, என்றைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகவே இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அல்ல. இன்றில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப் பொறுப்பை மக்கள் எங்களிடம் ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்கிறோம். ஆகவே நாங்கள், பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ளமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அடுத்தபடியாக இங்கு பல உறுப்பினர்கள் பேசும்போது தங்கள் தொகுதிகளில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொன்ஞர்கள். அந்தக் குறைபாடுகளையெல்லாம், நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் நானும் அவைகளைத் திரட்டிக் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். யார் யார் எதை எதைச் சொன்ஞர்கள் என்றல்ல—எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகளின் தன்மையைத் திரட்டி வைத்திருக்கிறேன். ஒவ்வொருவரும் தங்கள் தொகுதிகளின் நிலைமையை ஆராய்ந்து குறைபாடுகளை எடுத்துக்கொள்ளுகிருர்கள். 'இதைக் கவனிக்கவில்லை; அதைக் கவனிக்கவில்லை; எங்கள் தொகுதி கவனிக்கப்படுமா என்று தெரிய வேண்டும்,' என்றெல்லாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களில் பலரும் கேட்டார்கள்—நான் பிற உறுப்பினர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை.

"காங்கிரஸ்காரர்களே இந்தத் திண்டாட்டம் அடைகின்றபோது மற்றவர்களின் நிலைமையைப்பற்றிக் கூறவே வேண்டாம். கனம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர்—மதிப்பிற்குரிய அம்மையார் கூறிஞர் — 'எந்தெந்த மந்திரிகளையெல்லாமோ அழைத்து வந்து எங்கள் குறைகளை எடுத்துச் சொன்னேம்—வரவேற்பளித்தோம்—மாலைகள் அணிவித்தோம்—கனம் மந்திரி கக்கன் அவர்களைக்கூட அழைத்துவந்து குறைகளைச் சொன்னேம்; அவைகளுக்கு இன்னும் நிவர்த்தி கிடைக்கவில்லை; எங்களது துன்பமும் கண்ணீரும் துடைக்கப்படவில்லை' என்றுமனவருத்தத்துடன் கண்ணீர்விட்டார்கள்.

"ஏழைகளாகிய நாங்கள்—எதிர்க் கட்சியிலுள்ளவர்களாகிய நாங்கள்—அதுவும், 'இது ஒரு கட்சியா—இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகக் கடமை உணர்ந்தவர்களை வேறு பாதைக்குத் துரத்தாதீர்கள்!

களுக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று ஒரு சிலர் நினைக்கின்ற நேரத்தில், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நல்ல சீர்திருத்தங்களையெல்லாம் கொண்டுவந்த பிறகும்—நல்ல நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டுவந்த பிறகும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களின் கருத்து இத்தனை மோசமாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று என் பேதை நெஞ்சம் 'கேட்கத் தோன்றுகிறது. திட்டத்தின் பெயரால் எவ்வளவு பணம் செலவழித்தனர்? இருந்தும் என்ன பயன்?

"வேறு சில உறுப்பினர்கள் பேசுகையில், விவசாயிகளுக்கு 60—40 சட்டம் வந்த பிறகும் நிலச்சுவான்தாரர்களால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுவதின் நிலைமை பற்றி எடுத்துக்காட்டினார்கள்.

"வேலையில்லாத் திண்டாட்டம் போகவில்லை — நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை; குடிதண்ணீர் வசதி கிடைக்கவில்லை என்பவற்றையெல்லாம் பலஉறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். காங்கிரசு உறுப்பினர்களே! உங்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் ஒன்று கூறுகிறேன் — எதிர்க்கட்சியிலிருப்பவர்களுக்காவது குறைகள் இருக்கும். அவற்றை நிறைவேற்றித் தர, அவர்கள் குறைகளைக் கூற வேண்டியதுதான். ஆனல் ஆளுங்கட்சிக்காரர்களாகிய உங்களுக்குப் பல 'கமிட்டி',கள் இருக்கின்றன; அவைகள் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து வரிகளின் குறைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். இருந்தும் நீங்கள் இங்கு எடுத்துச் சொல்வானேன்?

"நீங்கள் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டீர்களா—அல்லது, அவர்களது செவிகளில் நீங்கள் கூறுவது ஏறவில்லையா? சொல்லியும் பலனில்லை என்றா — அல்லது எமக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடா?

"ஆகவே, நீங்கள் இம்மாதிரியான குறைகளைப் பற்றி விரிவாகப் பேசவில்லை என்றால், எதிர்க்கட்சியினராகிய எங்களுக்கு 'பட்ஜெட்'டின் அடிப்படைக் கொள்கையைப் பற்றி இன்னும் அதிகம் பேசுவதற்கு நேரம் கிடைத்திருக்கும். இங்கு கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் எல்லாம் 'நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை' என்பதுதான். எங்கள் குற்றச் சாட்டுகள் அப்படியல்ல; கொள்கை அடிப்படையில் நாங்கள் குறை காண்கிறோம்; ஜனநாயகம் வளருவதற்கு நிர்வாகம், கொள்கை அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டும்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களின் அனுமதியின்பேரில், இம் மன்றத்தில், கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்:—

"The Finance Minister, in his budget speech, will deal with the policies of the new Ministry"

என்று, வாக்களித்திருப்பதை எல்லாம் நிதி அமைச்சர் அவர்களின் உரையில் கொள்கை அளவில் அறிவிக்கப்பட்டிருக்கும் என்று எண்ணி துருவித்துருவிப் பார்த்தேன்; காணவில்லை. இதில் தெளிவான விளக்கம் இல்லாததற்கு இரண்டு காரணங்கள் தோன்றுகின்றன.

"ஒன்று—'எங்களது காங்கிரஸ் கொள்கை உங்களுக்குத் தெரியாதா?' என்று நிதி அமைச்சர் கருதியிருக்கக்கூடும்; மற்றொன்று,—'பொருளாதாரத்தையும் அரசியல் சாத்திரத்தையும் சேர்த்து புள்ளி விவரங்களாகத் தந்திருக்கிறேன் பார்' என்று சொல்வது! நான் கல்லூரியில் இரண்டு பாடங்களையும் சேர்த்து ஒன்றாகத்தான் படித்தேன். இருந்தும், என்னல் இதில் கொள்கை விளக்கம் ஒன்று இருப்பதாகக் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், உண்மையிலேயே இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நான் ஆராய்ந்த வரையிலும், தரப்படுகின்ற விவரங்கள் எல்லாம், ஒரு குழுவின் கீழ் தயாரிக்கப்படுகின்றன—இந்தக் குழுவினுல் பரிசீலிக்கப்பட்ட மூன்று அம்சங்களையும் பரிசிலித்துப் பார்த்தால்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் தாரதம்மியம் நன்ருகத் தெரியும்.

"உதாரணமாக, இன்றையத் தினம் கனடாவில் இம்மாதிரி வரவு-செலவுத் திட்டத்தை ஆளும் கட்சியினர் கொண்டுவந்தால் உண்மையிலேயே அச்சத்தோடு கொண்டுவருவார்கள் என்று கருதலாம். ஏனென்றால், அங்கே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையிலே உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசம் 10, 12-தான்.

"இன்றையத் தினம், என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில், ஆளும்கட்சியினர், நாங்கள் 15 பேர்தான் இருக்கிறோம் என்று கூறுவர். அது மாத்திரம் அல்ல; எதிர்க்கட்சியிலுள்ள எல்லோரையும் கூட்டிச் சேர்த்துப் பார்த்தாலும்கூட-கூட்டுவதும் சேர்ப்பதும் கடினம்—அத்தனை பேர்களைக் காட்டிலும் 3 மடங்குக்குமேல் அதிகமாக ஆளும் கட்சியினர் உள்ளனர். அதனல், அவர்களுக்கு நிச்சயம் தெரியும்—என்ன குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினுலும்—எத்தனை ஒழுங்கினங்களை எடுத்துக்காட்டினுலும் - எந்தக் கொள்கை விமரிசனம் செய்யப்பட்டாலும், 'இன்று தானே பேசப் போகிருர்கள்; பேசட்டும்—பேசி என்ன காரியம் நடக்கப் போகிறது—என்ன ஆகிவிடப்போகிறது,' என்ற எண்ணம் தோன்றியிருக்கக் கூடும். அந்த நம்பிக்கையின் பேரிலேயே இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எங்கள் எண்ணிக்கையை மட்டும் கருதாமல், எண்ணத்தைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"நிதி அமைச்சர் அவர்களைப் பலர் பாராட்டினர்கள். பாராட்டுதலினல் அவருக்கு அஜீரணம் ஏற்பட்டு விடுமோ என்று எண்ணத் தோன்றும் அளவிற்குப் பல உறுப்பினர்கள் பாராட்டினர்கள். ஆனல், என்னுடைய பாராட்டுதல், இனிப்போடு கொஞ்சம் காரமும் கலந்ததாக இருக்குமாதலால், அவருக்கு ஏற்பட்ட அஜீரணம் மாறி, ஜீரணம் ஆகிவிடும்!

"தான் யார் என்று நாங்கள் அறிந்து கொள்ள முடியாமல் நடந்து கொண்டிருப்பதற்கு நிதி அமைச்சரை வெகுவாக பாராட்டுகிறேன். தான் யார் என்று காட்டாமல் இருப்பதற்குக் காரணம், கண்டுபிடிப்பதற்கு முன்னல், யார் என்று காட்டிக் கொள்வது நல்லதல்ல என்று கருதினர்களோ, அல்லது, தான் யார் என்று கண்டுபிடிக்கக் கூடாது எனக் கருதினர்களோ—புரியவில்லை; காட்டிக்கொள்ளவுமில்லை. நான் இதைக் குறிப்பிடுவது, பொருளாதாரப் பாதைக் கண்கொண்டு சொல்லுகிறேன்.

"அதிக வரிபோட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்குவதை ஆதரிப்பவரா—கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு நாட்டின் நிர்வாகத்தையொட்டிச் செல்கின்ற பரம்பரைப் பொருளாதார நிபுணராக இருக்கிருரா—துண்டு விழும் பட்ஜெட்டினல் நாட்டுககு நன்மை உண்டென்று கருதும் பொருளாதார நிபுணராக இருக்கின்ருரா—உபரி (Surplus) பட்ஜெட் நாட்டுக்கு நல்லது என்று கருதுபவராக இருக்கிருரா என்பதை அவர் வார்த்தைகளில் காணவே முடியவில்லை. துண்டுவிழும் (Deficit) பட்ஜெட்டைப் பற்றிப் பேசும்போது 'Deficit budget is not bad. It is a virtue also' என்று சில உறுப்பினர்கள் பாராட்டினர்கள். கனம் உறுப்பினர் முத்தையா செட்டியார் அவர்கள், 'இதுதான் ஒரு சிறந்த பொருளாதாரத் திட்டம்; பன்னெடு நாட்களாக நான் கூறிவந்த யோசனையை இப்போதுதான் ஏற்றுக்கொண்டார்கள்' என்று மிகமிக அவசரமாகக் கூறிச்சென்ருர்கள்.

"பற்ருக்குறை பட்ஜட்டின் மூலம், நிதி அமைச்சர், நாட்டின் நலனைச் சரிக்கட்ட விரும்பினரா? அல்லது, நிதி அமைச்சருக்குக் கட்டுக்கடங்காத நிலையில் இந்த பட்ஜெட் கொண்டு சென்றிருக்கிறதா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இரண்டுக்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்ருகத் தெரியும்.

"ஜெர்மன் நாட்டை ஆண்ட இட்லர், துண்டுவிழும் பட்ஜெட்டை, அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான ஆயுதம் என்று கருதி, கட்டுக் கடங்காத அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, ஏராளமான நோட்டுகளை அடித்து, துப்பாக்கியின் துணைகொண்டு வினியோகித்துத் தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் காப்பாற்றிக் கொண்டான்.

"பற்ருக்குறை பட்ஜெட்டின் மதிப்பை நிதி அமைச்சர் வெளிப்படுத்தவில்லை. ஒரு சமயம் நிதி அமைச்சர் துண்டுவிழும் 'பட்ஜெட்' இருப்பதுதான் சரி என்று கருதுகிருரா அப்படியிருக்கக்கூடும். சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்மீது பலர் நிகழ்த்திய பேருரையை நான் மிக்கக் கவனத்துடன் பார்த்தேன். விசித்திரம் என்னவென்றல், அவர் துண்டுவிழும் 'பட்ஜெட்' சமர்ப்பித்ததற்காக இப்போது எப்படிப் பாராட்டப்பட்டிருக்கிருரோ, அதே மாதிரிதான் சென்ற ஆண்டும் இதே மன்றத்தில் அவர், அதிக வரி போட்டு உபரி பட்ஜெட் கொண்டுவந்ததற்காகப் பாராட்டப்பட்டிருக்கிருர். நிதி அமைச்சர் தனது நிலைமைக்கேற்ப வரவு—செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிருர் என்று கருதுகிறேன்.

"பாராட்டுதல், சனநாயகத்தில் சாதாரணம்தான்; ஆனல், அது அளவிற்கு அதிகமாகப் போய்விடக் கூடாது என்பது உள்ளபடியே என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

"துண்டுவிழும்பட்ஜெட் தயாரிக்கும் நேரத்தில் அவர், புதிய வரிகளைப் போடவில்லை என்பது பற்றிச் சில உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசினர்கள்.

"என்னைப் பொறுத்தவரையிலும் சரி—என் கட்சியைப் பொறுத்தவரையிலும் சரி—அதிகமா, குறைவா என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் கஷ்டநஷ்டங்கள் அமையும் என்ற கருத்துக்கொண்டவர்களல்ல, நாங்கள்! தாங்குபவர்கள்மீது வரி போடுவதும், தாங்க முடியாதவர்கள்மீது இருக்கும் வரிகளை குறைப்பதும்தான் நல்ல திட்டத்தின் அடிப்படை நோக்காக இருக்க வேண்டும் என்றுதான் நான் படித்த பொருளாதார அரிச்சுவடியில் போதிக்கப்பட்டிருக்கிறது. ஒருசமயம், நிதி அமைச்சர் அதற்கும் மேல் படித்த பொருளாதாரத்தில் வேறுவிதமாகப் போதிக்கப் பட்டிருக்கிறதோ நான் அறியேன். அல்லது அவருக்கு நிர்வாகத்தில் புதியதாக ஏதாவது அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ புரியவில்லை!

"பொருளாதாரத் தத்துவத்தை விளக்கியவர்கள் 'Progressive taxation—Regressive taxation' என்று இரண்டு வரி விதிப்பு முறைகளைக் குறிப்பிட்டிருக்கிருர்கள்; இதையே வேறு விதமாகக் கூறவேண்டுமானல், 'Direct taxation—Indirect taxation' என்றும் விளக்கம் தரலாம்.

"இந்த நிமிடம் வரையில் நமது வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்தால், ஏழைமக்கள் தருகின்ற விற்பனை வரியிலிருந்துதான் அரசாங்கத்திற்குக்கணிசமான அளவுக்குப் பணம் வருகிறது. எத்தனையோ துறைகள் இந்த நேரத்திலே கவனிக்கப்படாமல் விடப்பட்டு இருக்கின்றன என்று ஆங்காங்கு பெரிய கூக்குரல்கள் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே விற்பனை வரி மக்களை வாட்டிவதைக்கின்றது என்பதை, பல்வேறு கட்டங்களில், பலமுறை இடித்துரைத்து எடுத்துரைத்திருக்கிறோம். எனவே, இந்த நேரத்தில் எதிர்பார்த்தது என்னவென்றல், உணவுப் பொருட்களுக்காவது நமது நிதி அமைச்சர் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பார் என்பதுதான். நமது நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகளும் வாணிப சங்கங்களும் பல காலமாகப் பல்வேறு மகாநாடுகளைக் கூட்டி, அமைச்சர்களுக்கு அமைச்சர்கள் சிலரைக்கூட வரவழைத்து அவர்களிடம் மகஜர்கள் கொடுத்தும், தங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, 'பல்வேறு கட்டங்களில் போடப்படும் விற்பனை வரியை ஒரே கட்டத்திலாவது வசூலிக்கப்பட்டால், நாங்கள் திருப்தி அடைவோம், என்று எடுத்துச்சொன்னர்கள்.

"முதலமைச்சர், வியாபாரக் கூட்டம் நிறைந்த விருதுநகரைச் சார்ந்தவர் என்பதால் அவ்வாறு செய்வார் என்றும் நினைத்தோம். 'வியாபாரிகளுக்குச் சலுகை காட்டுகிருர் என்று நாங்கள் சொல்வோம் என்று அஞ்சி ஒருவேளை, விற்பனை வரி விஷயத்தில் கண்டிப்பாக இருக்கிருர்களோ என்றும் எண்ணுகிறேன். அப்படிப்பட்டவர்கள் அல்ல, நாங்கள்! அப்படிச் சொல்லவும் மாட்டோம்! எனவே, எங்களுக்காக அஞ்ச வேண்டாம். மற்ற விஷயங்களுக்காக அப்படிச் செய்திருந்தால் போகட்டும்; ஆனல், எங்களுக்காக அப்படிச் செய்திருந்தால் தயவுசெய்து அதை மாற்றிக் கொள்ளுங்கள்—ஒருமுனை விற்பனை வரி போட முன்வாருங்கள்—உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளியுங்கள் என்று உறுதியுடன் கூறுகிறேன்.

"நிதி அமைச்சர் அவர்கள் 'food grains' (உணவுத் தானியங்கள்) என்றிருப்பதை 'food stuffs' (உணவுப் பண்டங்கள்) என்று மாற்றினல், ஓரளவுக்கு நாட்டில் நல்ல திருப்தி ஏற்படும்.

"'வார்த்தைகள் மாற்றம், ஊர்களின் பெயர் மாற்றம் இது தானே உங்கள் கட்சியின் திட்டம்?' என்று சொல்வதாக அவர் புன்னகை எடுத்துக் காட்டுகிறது.

"ஆனல், நாங்கள் சொல்கின்ற திட்டங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அரசாங்கத்திற்கு பெரிய செலவில்லாத திட்டங்களைத்தான் நாங்கள் சொல்வோம். பெரிய செலவுத் திட்டங்கள் கொடுத்தால் அவர்கள்தான் என்ன செய்வார்கள்—எங்கு போவார்கள்; தெரிந்ததுதானே! வடக்கே போகிருர்கள்-ஆனல் அங்கே கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகிருர்கள்!

"உணவுத் தானியங்கள் என்பதை உணவுப் பொருட்கள் என்று மாற்றி, அவைகள்மீது விற்பனை வரியை நீக்கினல், அரசாங்கத்திற்கு அதனல் ஒரு சில இலட்சம் ரூபாய்தான் வருமானம் குறையும்.

"ஆனல் மக்கள் சாப்பிடுகின்றபோது அரசாங்கத்தை மனதார வாழ்த்துவார்கள். உணவைச் சாப்பிடுகின்ற நேரத்தில், 'நல்ல சர்க்கார் நாட்டில் நிலவுகிறது—நல்ல அமைச்சரவை நாட்டை ஆளுகிறது — உணவுப் பொருள்கள்மீது வரியை எடுத்து விட்டார்கள்' என்று மனமார வாழ்த்துவார்கள்.

"சட்ட சபையில் பலர் வந்து போகிருர்கள் — ஜனநாயகத்தின் பரிசாக அவர்கள் இதை மதிப்பார்கள்; முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்துவார்கள்; இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள். (இந்த நேரத்தில் நிதி அமைச்சர், 'மூன்ருவது கவளத்தில் இதை எடுத்துச் சொன்னவரை வாழ்த்துவார்கள்' என்று கூறியதும் அவையில் பெருத்த சிரிப்பொலி எழும்பியது!)

தொடர்ந்து பேசுகையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்:—

"சாப்பிடுகின்ற நேரத்தில் சாப்பாட்டுப் பொருள்கள்மீது

# நேரடி இலாபம் கருதாமல் மக்கள் மகிழ்ச்சியை பணமாக மாற்றி மகிழ்வீர்!

வரியில்லை என்று பொதுமக்கள் ஒருமுகமாக வாழ்த்துவார்கள். மேலும், 'சாப்பிடும்போது வாழ்த்துவது நல்லது' என்று வைதிகர்களும் கூறுவார்கள். மற்ற விஷயங்களில், வைதிகத்தில் வேறுபட்ட கருத்துக் கொண்ட நான், இந்த விஷயத்தில் மட்டும் வேண்டுமானால் ஒத்துக் கொள்கிறேன்.

"வரவு-செலவுத் திட்டத்தில் புதுவரி போடப்படாதது பற்றி இங்கே பேசிய பல காங்கிரஸ் உறுப்பினர்கள், காரணத்தை ஆராய்ந்து எடுத்துக் காட்டினார்கள். ஆனால், நிதி அமைச்சர் புது வரி போடாததற்குக் காரணம்பற்றி என்னுடைய கருத்து என்னவென்றால், ஏற்கனவே பட்ட அடியால் (மத்திய அரசாங்கத்தின் வரி விதிப்பு) ஏற்பட்ட தழும்பு மாறுமலிருக்கும் போது, தானும் அதன்மேல் அடிக்க வேண்டாமென்று விட்டிருக்கக்கூடுமென்பதுதான்.

"எப்பொழுதும் நிதி அமைச்சர்கள் மன அரிப்பு கொண்டவர்கள். ஒருமுறை நிதி அமைச்சர் பீடத்தில் அமர்த்திவிட்டால் அவர்களுக்குக் கனவிலும் நினைவிலும் 'வரி' என்ற நினைவுதான் இருக்கும்.

"ஒரு நகைச்சுவை ஏட்டில் படித்தேன்—மனைவி கட்டிக்கொண்டிருக்கும் சாதாரண சேலையைப் பார்த்த ஒரு நிதி அமைச்சர், 'இதில் வரி இல்லையா?' என்று கேட்டாராம். அங்குகூட நிதி அமைச்சருக்கு 'வரி'யின் கவனம் போகவில்லை! கற்பனை நிதி அமைச்சரைப் பற்றித்தான் குறிப்பிட்டேன்—இந்த நிதி அமைச்சரை அல்ல!

"எங்களுக்குப் பயந்து அவர் வரி போடாமல் விட்டிருக்கிறார் என்று நான் சொல்லவில்லை—எங்களில் யாரும் கூறவில்லை. ஆனால், அவர்களுடைய கட்சியிலேயே இருப்பவர்களில் ஒரு சிலர் அப்படி சொன்ன காரணத்தால், எங்களுடைய கழகத்தைச் சார்ந்தவர்களும், 'ஆமாம், எங்களுக்குப் பயந்துதான்' என்று சொன்னார்கள்,

"நிதி அமைச்சர் வரி போடாமல் இருப்பார் என்பதில் உண்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், அவர்களுடைய வாக்கியத்தை நல்ல தமிழில் எழுதியிருக்கிறார் என்று உறுப்பினர்களனைவரும் பாராட்டினார்கள். தமிழ் எப்போதும் பொய்க்காது; தமிழில் இருக்கும் வாக்கியத்தைப் பார்த்தால் 'இந்த எண்ணத்தில் இப்போது எஞ்சிய பற்றுக்குறையை ஈடுசெய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்' என்று இரண்டு மூன்று ஆபத்தான பதங்களை மிக அழகாகவும் சாமர்த்தியமாகவும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

"இதற்கு நேர்மாறாகப் பம்பாய் மாநில நிதி அமைச்சர் அவர்களும், இதேபோல, துண்டு விழுந்த பட்ஜெட் சமர்ப்பிக்கின்றபோது 'என்னுடைய மாநில மக்கள்மீது அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது; புதிதாக மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியில் பெரும்பாகம்—அதாவது 40 சதவிகிதம்வரை என்னுடைய மாநிலத்திலிருந்து வசூலிக்கப்படும் என்று நான் அஞ்சுகிறேன் ஆகையால் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழுவதைச் சரிக்கட்ட நான் புதுவரித் திட்டங்கள் எதையும் போடவில்லை' என்று காரணம் காட்டியிருக்கிறார்.

"ஆனால், இங்கே, நமது நிதி அமைச்சர் காரணம் காட்டவில்லை—காரணம் காட்டாதது மட்டுமல்ல—ஏன் காட்டப்படவில்லை என்று ஆவலோடு திட்டத்தை அலசிப் பார்த்தேன். காரணம் காட்டாததில் ஒரு பயம் பிறந்தது. கடைசியில் பார்க்கும்போது, 'இந்த எண்ணத்தில் இப்போது எஞ்சிய பற்றுக்குறையை ஈடுசெய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்' என்று கூறியிருப்பதைக் கண்டு, அதில் 'தற்காலிகமாக' என்றிருப்பதாலேயே, 'இந்த ஆண்டுதான் அங்கிருந்து (டில்லி) விழுந்திருக்கிறது அடி; அந்த அடியின் தழும்பே இன்னும் மறையவில்லை; அடுத்த ஆண்டு நான் தருகிறேன்; அதுவரையில் பொறுங்கள்' என்று அடுத்த ஆண்டுக்கு மக்களைக் காக்க வைக்கிறார் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

"வரி என்று குறிப்பிடுகிற நேரத்தில், வரிகளுடைய முறைகளைப் பார்த்துத்தான் ஆளும் கட்சி அல்லது சர்க்காருடைய போக்கினை மக்கள் தீர்மானித்துக்கொள்ள முடியும். அதனால்தான் பல்வேறு கட்சிகள்-முற்போக்குக் கட்சிகள், 'இந்த நாட்டை இன்று ஆளுகின்றனரே — அவர்களுடைய திட்டங்கள் சமதர்மம் பொருந்தியவை என்று எடுத்துச்சொல்லப்பட்டனவே; அதற்கேற்றபடி நடக்கவில்லையே' என்று வருத்தப்பட்டார்கள். அத்தகைய வருத்தத்திற்குக் காரணம் புரிகிறது.

"நம்முடைய ஆட்சியாளர்கள், 'சமதர்மம் சமதர்மம்' என்று எடுத்துச்சொல்கிறார்களே தவிர, அவர்கள் இன்றைய தினம் கையாளுவதெல்லாம், 'சமய தர்ம'மே தவிர, 'சமதர்ம'மல்ல! அதாவது, சமயத்திற்கேற்றபடி, சில 'தர்ம'ங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்—'ஐயோ போதும்; வரிபோடுவதற்கு இது நல்ல சமயமல்ல; ஆகவே இப்போது வரிபோட வேண்டாம்' என்ற அந்த முறையில்தான் சர்க்கார் கணக்கிட்டுள்ளது. அதனுல்தான் இவர்களுடைய கொள்கை 'சமதர்ம'மாக இல்லை; 'சமயதர்ம'மாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

"இனி வரவு-செலவுத் திட்டத்தின் காலத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கும்போது, 'முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் இருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நம் நாட்டை ஓரளவு சீர்படுத்தியிருக்கிறது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேலும் சீர்ப்படுத்தும். ஆகையால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் புதிய வரி போட்டாலும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்,' என்ற வாதத்தை என்னால் புரிந்துகொள்ளமுடியாது. எப்போது புரிந்துகொள்ள முடியாதென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே ஏழை—எளிய—பாமர மக்களுக்கு நன்மை பயந்துள்ளது என்பதற்குப் புள்ளி விவரங்களோடு காட்டி அதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்குக் கிடைத்த வலிவின் காரணமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய வலிவு ஏற்படுமானால், அப்போது அவர்களுடைய வாதத்தை உண்மையில் நான் பாராட்டக்கூடும்.

"நல்ல வேளையாக, சபாநாயகராக அமர்ந்திருக்கும் தாங்கள் மருத்துவத்துறையில், கொஞ்சம் மெலிந்திருக்கிறவர்களுக்கு கடினமான 'டானிக்' தந்திருக்கமாட்டீர்கள் என்று கருதுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்னல் மக்களுக்கு அடிப்படைத் தேவையாக உள்ள உணவு, உடை, குடியிருப்பு ஆகிய இந்த மூன்று அடிப்படைத் தேவைகளை மக்கள் பெற்றிருக்கிறார்களா என்று பார்த்தால், காங்கிரஸ் பேரவையின் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன், 'Economic Review' என்ற ஏட்டில்,

'The people feel that while the poorer section cannot escape taxation of an indirect nature in the form of sales tax and excise duties on various necessaries of life, the richer classes have become experts in managing evation and avoidence of taxation'

என்று குறிப்பிட்டுள்ளது—அதுவும் காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படுகிற ஏறக்குறைய அதிகாரபூர்வமான ஏடாக விளங்கும் 'எக்கானமிக் ரிவியூ'வில் இப்படிச் சொல்லியிருக்கிறார் என்றால், நாம் சொல்வதில் என்ன தவறு? அதுமட்டுமல்ல; உலகறிந்த பொருளாதாரப் பேராசிரியர் கால்டர் என்பவரும் இதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார் :—

'Evation of direct taxes in India is of the order of Rs. 200 to 300 crores per year.'

"இப்படி கால்டர் மதிப்பீட்டின்படி, இந்தியத் துணைக்கண்டத்தில் ஆண்டுதோறும் பணக்காரர்கள் ஏமாற்றும் வரி 200 அல்லது 300 கோடி ரூபாய் வரையில் இருக்கும் என்று புள்ளி விவரம் தந்திருக்கிறார். இந்தமதிப்பீட்டை ஆராய்ந்து 'மிகைபடுத்தப்பட்டுள்ளது' என்று முடிவு செய்து, 'எப்படிக் கணக்கிட்டாலும் 60 கோடிக்குமேல் இருக்காது' என்று இந்திய அரசாங்கமே அறிவித்ததையும் நான் அறிவேன். எனினும் இப்படிப் பெருத்த அளவுக்கு வரி வசூலிக்கப்படாமல் இழக்கப்பட்டிருக்கிறதென்பதை ஸ்ரீமன் நாராயணன் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

"அதுமட்டுமல்ல; ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அவர் குறிப்பிடும்போது,

'The common man has not been able to feel the glow of freedom during the last few years in accordance with his expectation'

என்று தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

"இந்த அரசாங்கத்திடம், 'இதைச் செய்யவில்லை—அதைச் செய்யவில்லை' என்று பலர் கேட்கும்போது, ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், 'இது என்ன, எப்போது பார்த்தாலும் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்களே' என்று சொல்லலாம். சர்க்காரிடத்திலே அபாரமான நம்பிக்கை இருப்பதின் காரணமாகத்தான் மக்களை இன்றைய தினம் அப்படிக் கேட்கிறார்கள். அதைக் குறித்து ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் பெருமைப்பட வேண்டும். இந்த நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டிருந்தால் அவர்களைக் கேட்கமாட்டார்கள்.

"வெள்ளைக்காரன் காலத்தில் சாதாரண 'அரிகேன் விளக்கு' தானே இருந்தது — இப்போது நம் காலத்தில் பெரிய 'டியூப்' விளக்கு போடப்பட்டிருக்கிறதே என்று பெருமைப் பாராட்டாதீர். அப்படிப் பெருமைப் பாராட்டிக் கொள்வீர்களானல், உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டவர்களாவீர், வெள்ளைக்காரனும் அப்படித்தான் சொன்னன்—'இரயிலையே பார்க்காத உங்களுக்கு நான்தானே காட்டினேன்—அதிலேயே என்னை ஏறிப்போகச் சொல்லுகிறாயே?

"ஆகையால், வெள்ளைஏகாதிபத்தியத்திலிருந்து பழுப்பு ஏகாதிபத்தியமாகக் காங்கிரஸ் ஜனநாயகம் மாறக்கூடாது என்ற கவலை கொண்டுதான் காங்கிரஸ் பேரவையின் பொதுச்செயலாளர் ஸ்ரீமந்நாராயணன் எச்சரித்துள்ளார்.

"மற்றொன்று கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கிற 'கம்யூனிட்டி பிராஜக்ட்'பற்றி ஸ்ரீமந் நாராயணன் குறிப்பிடும்போது 'அவை திருப்திகரமான நிலையில் இல்லை' என்று கூறியிருக்கிறார்; அதாவது,

'Even in the Community Projects and National Extension Services, it is now being admitted that lowest sections of rural population have not been benefitted to any considerable extend. In fact, all the available statistics tend to show that the difference between the living standard of the richer and poorer sections, instead of being narrowed down has increased further during the last nine or ten years.'

"இப்போது நான் இந்த மன்றத்தின் முன்னல், கனம் சபாநாயகர் அவர்களின் அனுமதியின்பேரில் கேட்டுக் கொள்வது என்னவென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அளவுக்கு மக்களை ஏமாற வைத்திருக்கும்போது அதே ஏழை மக்களை வரி கொடுக்கச் சொல்லிக் கேட்பதில் என்ன பயன்? ஆகையினல், வரி யாருக்குப் போடுகிறார்கள் என்பதைப் பொறுத்தும், எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இந்த பட்ஜெட்டைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்."

தொடர்ந்து பேசுகையில் அண்ணு அவர்கள், நிதி அமைச்சரின் திட்டத்தில் ஐந்தாவது பாராவில் 'விலைவாசிகள் ஏறுமுகம்—அன்னிய செலாவணியில் குறைவு—இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலையை இன்று பாதிக்கும் பெரும் சிக்கல்கள்,' என்று குறிப்பிட்டுள்ளதைப் படித்துக்காட்டி, மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"இதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி மறுப்பவர்கள் உண்மையை மறைப்பவர்கள் ஆவார்கள்.

"இன்றையத்தினம், உண்மையில் இந்த இரண்டு பெரிய குறைகள் இருக்கின்றன. ஆனல்,நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த இரண்டுக்கும் நல்ல பரிகாரம் தேடும் திறமை நிதி அமைச்சருக்கு உண்டு என்பதைக் காட்டிக் கொள்ளாததே! ஆனல், இந்த இரண்டும் அவருடைய நேரடியான மேற்பார்வையிலோ, நேரடியான அதிகாரத்திலோ, நேரடி நிர்வாகத்திலோ அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

"இந்தியாவிலிருக்கும் நிலைமைகளை பொறுத்துதான் விலைவாசி ஏறுமுகம் அன்னியச் செலாவணிக் குறைவு ஆகிய இரண்டு சிக்கல்களையும் தீர்க்க முடியும். இதனை அவர் நன்முக உணர்ந்திருக்கின்ற காரணத்தால் நாம் இவைகளை இங்கு தீர்க்கப் போகிறோம் என்று எடுத்துச் சொல்லி தங்களால் செய்யக் கூடிய சில பல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். அதற்காக அவரை சில உறுப்பினர்களும் பாராட்ட விரும்பினர். ஒரு உறுப்பினர் உருக்கமாகக் கேட்டார்— 'ஒன்று கூட நல்லது சொல்லமாட்டீர்களா?,' என்று. நாங்கள் நஷ்டமடையாமல் நீங்கள் இலாபமடைவதில் நாங்கள் ஏன் குறுக்கே நிற்கப் போகிறோம்? மேலும், இதற்கெல்லாம் திருப்தி அடைந்துவிடக்கூடிய சபலமனம் படைத்தவரல்ல நம் நிதியமைச்சர் என்பதை அறிந்த காரணத்தால் நான் அவரைப் பாராட்டாமல் இருக்கிறேன்.

"அவர்மீதிருக்கும் அன்பின் காரணமாகச் சிலர் பாராட்டிப் பேசினார்கள். அப்படிப் பேசுவது அவர்களுக்கும் நல்லதுதான். அதுவேறு விஷயம்.

"நம்முடைய நிதி அமைச்சர் தம்முடைய வசதிக்கேற்ற அளவில் செலவைப் பிரித்துச் செய்திருக்கிற ஏற்பாடுகள் உண்மையிலேயே ஓரளவுக்கு வரவேற்க வேண்டியதாக உள்ளது. ஆனல், அந்த ஏற்பாடுகளை வரவேற்கின்ற நேரத்தில், அவைகளை மூன்ருகப் பிரித்துப் பார்த்துத்தான் நம்முடைய தீர்ப்பை அளிக்க வேண்டியதிருக்கிறது. அதாவது, ஒன்று—போடுகின்ற திட்டம்; இரண்டாவது—திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணம்; மூன்ருவது — அந்தப் பணத்தைச் செலவு செய்கின்ற நிர்வாக முறை. இந்த மூன்றும் சரிவர இருந்தால்தான் உண்மையிலேயே நம்முடைய திட்டங்கள் நல்ல பலனை அளிக்கும். உதாரணமாக நிதி அமைச்சர், 'சென்ற ஆண்டு 38 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன; இந்த ஆண்டு 136 பண்ணைகள் திறக்கத் தீர்மானித்திருக்கிறோம்' என்று சொன்னர்.

"உண்மையில் இது நியாயமான—தேவையான—மக்களால் வரவேற்கத்தக்க ஒரு நல்ல திட்டமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுகின்ற நோத்தில், இந்தப் பண்ணைகள் எந்த முறையில் வளர்க்கப்படுகின்றன — இந்தப் பண்ணைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலங்கள் யாரிடத்தில் வாங்கப்படப்போகின்றன— அப்படி வாங்கப்படுகின்ற நிலங்களுக்கு விலை எப்படி நிர்ணயிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

# நிதி அமைச்சர்களுக்கு நல்ல பாராட்டு ஏழையின் புன்னகையே-ஆளுங்கட்சியினரின் புகழுரையல்ல!

படும் — என்பதையெல்லாம் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

"அந்த நிலங்களை விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக நிலச்சுவான்தார்களைக் கூப்பிட்டு, அவர்களிடம் இருக்கின்ற ஏராளமான நிலத்தில் ஒரு பகுதியையேனும் கட்டாயமாக, விதைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று சட்டபூர்வமாக அறிவிக்கலாம். ஆனால், ஆளும் கட்சியில், அன்பு பாராட்டும் பல நிலப்பிரபுக்கள் இருப்பதால் அவர்களுக்குக் கனிவாக எடுத்துச் சொல்லி, ஒரு பகுதியை விதைப் பண்ணைக்கு ஒதுக்கி வைக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களும் கொடுத்துவிடுவார்கள். இப்படிச் செய்வதால் அந்தப் பண்ணைகளுக்கு முதலீடு செய்ய வேண்டியதில்லை—அரசாங்கத்திற்கும் பணம் மிகுதியாகும்—திட்டத்தையும் சுலபத்தில் நிறைவேற்றலாம் என்று நான் கருதுகிறேன்.

"விதைகள் கொடுப்பதைப் பற்றியும் ஏழை உழவனுக்கு அந்த விதைகள் கிடைப்பதில்லை என்றும் ஒரு உறுப்பினர் சொன்னார். எந்த நேரத்தில் விதைகள் விதைக்கவேண்டுமோ அந்த நேரத்தில் விதைகள் வராமல், அறுவடை நேரத்தில் வருவதால், அதையும் சேர்த்து மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள் என்று ஒருவர் அனுபவத்தின் காரணமாகக் கிராமப்புறங்களில் இருக்கும் நிலைமையைத் தெளிவாகச் சொன்னார்.

"ஏட்டில் திட்டங்களைக் காட்டுவதால் மட்டிலும் பாராட்டுதலுக்குரியவர்களாகிவிடமாட்டார்கள், நாட்டை ஆளுகின்ற சர்க்கார்! ஏட்டில் போடுகின்ற திட்டம் எந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும், இதற்கு முன்னால் இருந்ததைவிட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிகமாக இருக்கிறது—தலைக்கு ஒரு கரண்டி எண்ணெய் அதிகமாக இருக்கிறது—வாழ்வுக்கு ஒரு வேளை நிம்மதி அதிகமாக இருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். நிம்மதி கலந்த ஏழையின் புன்னகை தான் ஒரு நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் பரிசும்—புகழுமாகும்.

"தங்கள் கட்சிக்காரர்களும் எதிர்க்கட்சிக்காரர்களில் இரண்டொருவரும் புகழ்ந்து பேசிவிட்டால் அது எந்த அளவும் பலனளிக்காது. இதை நான் நிச்சயமாக வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் 'இந்த ஆண்டு 50 விதைப் பண்ணைகளைத் திறக்கப் போகிறோம்' என்று வாக்குறுதி அளித்தும், 38 மட்டிலுமே திறந்தார்கள்; அதாவது, 50 சொல்லி 38 என்றால், இப்போது 136 சொல்லி முப்பத்தாறுடன் நின்றுவிட்டால் என்ன செய்வது? இந்த ஆண்டு, எல்லா பண்ணைகளையும் திறக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்காக இந்த ஆண்டு, ரூ. 55-இலட்சம் செலவில் திட்டங்கள் தொடர்ந்து நடக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால், இதற்காக ரூ. 1,23,00,000 செலவிடப்பட்டதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்த ஆண்டு குறைவாக நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதற்குக் காரணத்தை விளக்க நிதி அமைச்சர் கடமைப்பட்டிருக்கிறார். நடைபெற்ற விவாதத்தில் இரண்டு பெரிய பிரச்சினைகள் பேசப்பட்டன. நம்முடைய முதலமைச்சர் மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டுவருவது—'இங்கே பெரிய ஆறுகள் இல்லை; அதனால் பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு இல்லை; வடநாட்டில் இருக்கின்றன; அதனால் பெரிய அணைகள் அங்கே கட்டப்படுகின்றன'—என்று!

"உண்மையிலேயே பெரிய ஆறுகள் தென்னாட்டில் இல்லை—அணைக்கட்டுகள் கட்ட' என்று நாகரிகமான முறையில் எடுத்துச் சொல்லி வருகிறார். அவர் கட்சியைச் சேர்ந்த சிலர், 'ஆறுகள் இல்லை அணைகட்ட; அண்ணாதுரை வாய்க்குத்தான் அணைக்கட்டியாக வேண்டும்' என்று யோசனை கூறுகிறார்கள்; முடிந்த வரையிலும் கட்டுங்கள் — வேண்டாம் என்று சொல்லவில்லை!

"சிறு நீர்ப்பாசன திட்டத்தைப் பற்றி பேசப்படும் நேரத்தில், இன்னமும் நம் நாட்டில் வீணாகிக்கொண்டிருக்கிற மலை அருவிகளைக் கட்டுப்படுத்தி சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செய்யக்கூடிய வசதிகள் நிறைய இருக்கின்றன. அவைகள் தள்ளப்படுவதற்குக் காரணம் என்ன?

"செலவழிக்கப்படும் பணத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவாக இருக்கும் என்ற ஒரே காரணத்திற்காக ஒதுக்கிவைக்கிறோம் என்று சொல்கிறார்கள். சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதால் கிடைக்கும் நேர்முகமான இலாபத்தைப் பார்க்கிறார்களே தவிர, அதனால் மக்கள் மனதில் ஏற்படக்கூடிய மகிழ்ச்சியும், அந்த மக்களுக்கு ஏற்படக்கூடிய திருப்தியும் ரூபாய்களாக மாற்றிப் பார்த்தால் உண்மையிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றவேண்டும் என்ற ஏற்பாட்டை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

"எல்லோரும் அவரவர் தொகுதிகளைப் பற்றிக் குறைபட்டார்கள்; அதைப்போலவே நானும் என் தொகுதியைப்பற்றிப் பேசாவிட்டால், 'அண்ணாதுரை, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேசினாரே தவிர, தன் தொகுதியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை,' என்று—நாங்கள் கருத மாட்டோம்—என் தொகுதியில் உள்ளவர்களும் கருதமாட்டார்கள்—ஆனால் இங்கு எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் சொல்வார்கள்.

"என் தொகுதியிலிருக்கும் வரண்ட ஒரு ஆற்றைப்பற்றி முதலமைச்சரின் ஈரமான நெஞ்சத்தற்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். நான் ஒரு சிறுவனாகப் பள்ளியில் படித்த காலத்தில் ஆசிரியர் மணியை அடித்து, 'பிள்ளைகளே, வீட்டிற்குப் போகலாம்; பாலாற்றில் தண்ணீர் வந்துவிட்டது' என்று கூறியது என் நினைவிற்கு வருகிறது.

"எங்கள் பகுதியில், பாலாற்றில் தண்ணீர் வந்தது என்றால் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டுக் கொண்டாடக் கூடிய காட்சியாகும். பாலாறு ஒரு நல்ல ஆறு; பெரிய ஆறு; ஆண்டுக்கொருமுறை நான்கு நாள் மூன்று நாள் பெய்கின்ற மழையில் அப்போது தண்ணீர் வெள்ளமாக வருகிறது; ஆங்காங்கு சிறு சிறு தேக்கங்களாக நிரப்பி அங்குள்ள பெரிய ஏரிகளையும் குளங்களையும், சிப்பி, செங்கற்பட்டில் நீர்ப்பாசனம் நடந்து வருகிறது. ஆற்று வெள்ளம் ஏரியில் தேக்கப்படுவதால் அந்த வெள்ளத்தால் அடித்து வரப்படும் வண்டல் மண் அந்த ஏரியில் படிந்து ஆழம் குறைந்து நாளடைவில் வடிகால்களை உடைத்துக் கொண்டு, வெள்ளம் வந்தாலும் தண்ணீர் தங்காமல் வெளியில் பாய்ந்தோடுகிறது.

"எப்படி சில விஷயங்களைப் படித்தாலும் உண்மை பொருளைத் தெரிந்து கொள்ள முடியாமல் தானாகவே வெளியே கக்கி விடுகிறோமோ, அதுபோல பொங்கி வரும் நீரை வெளியே கக்கி விடுகிறது.

"சென்னை அரசாங்கமும் மைசூர் அரசாங்கமும் நடத்திய பல்வேறுமாதிரியான பேச்சு வார்த்தைகள் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று அறிய விரும்பினால்-அதைப்பற்றிக் கேட்டால், 'அது முடிந்து விட்டது' என்று சொல்லி விடுகிறார்கள்.

"நம்முடைய நிர்வாகப் பிரச்சினை எதனையும், 'முடிந்து விட்டது' என்று கருதாமல், நமது மாநில முதலமைச்சர் அவர்கள் பாலாற்றைப்பற்றி மைசூர் மாநில முதலமைச்சருடன் மீண்டும் கலந்துபேசி ஆவனசெய்ய வேண்டுகிறேன். முன்னாலே, நிபுணர்களையெல்லாம் கலந்து பேசினார்கள். நமது முதலமைச்சர் நிபுணரல்ல; நிபுணரல்லாத ஒரு காரணத்தால்தான், நாட்டு மக்கள் அவரிடத்தில் இன்றைய தினம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்! நிபுணர்கள், புள்ளிவிவரங்களை நம்புவார்கள். நிபுணரல்லாத இவர், நாட்டு மக்களின் பசித்த வயிற்றையும், காய்ந்த தலையையும், கவலை படிந்த முகத்தையும் பார்த்துத்தான் மக்கள் நிலையைத் தெரிந்து கொள்கிறார். ஆகையால், பாலாற்றுக்குத் தண்ணீர் வருவதற்கு மைசூர் அரசாங்கத்திடம் உடனடியாக மறுபடியும் பேச்சுவார்த்தைகளைத் துவக்கிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"அதைத்தவிர, இதற்கு வேறு ஒரு வழியும் உண்டு. ரஷ்ய நாட்டில் இதுபோன்ற நிலைமையில் ஆற்றுக்கு மேலே தண்ணீர் இல்லாமல் போனாலும் பூமிக்கடியிலிருக்கும் தண்ணீரை மின்சாரத்தின் மூலம் ஆங்காங்கு வெளியே கொண்டு வந்து அதன் மூலமாக நீர்ப்பாசனம் நடத்துகிறார்கள். இதைப்பற்றி நமது பொறியியல் இலாகாவினர் மேலும் எடுத்துச் சொல்லக்கூடும். அந்த முறையிலேயாயினும் பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமெனறு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

"அதைச் செய்துவிட்டு எங்கள் கழகத்தைப்பற்றி செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்த மூலை முடுக்கில் போய் திட்டினாலும் மக்கள் மாலை போடுவார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் திட்டட்டும்; 'மன்னரே, தண்ணீர் கொண்டுவந்தோரே' என்றெல்லாம்கூடப் பாராட்டுவார்கள். எனவே, இதில் இரண்டு இலாபம் இருக்கிறது-ஒன்று மக்கள் ஆதரவு கிடைக்கிறது; இரண்டாவது எங்களை அடக்குவதற்கு ஒரு வழி கிடைக்கிறது. எப்படியோ பாலாற்றுக்குத் தண்ணீர் வந்தால் போதும்!"

அடுத்து அண்ணா அவர்கள் சென்ற ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தை சபையின் முன் கொண்டுவந்து, நிதி அமைச்சர் கொண்டுவந்து ஆற்றிய சொற்பொழிவைப் படித்துக்காட்டி, 'தென்னாட்டைத் தொழில்துறையில் வளர்ச்சி செய்யத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பை உண்மையிலேயே சர்க்கார் விரும்பினால், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குத் தயாராக உள்ளது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்; தொழில் முன்னேற்றம், தொழிலாளர்களைப் பாதிக்காமல் வாழவைக்கக் கூடியதாகவும், நாட்டின் செல்வத்தைப் பெருக்கக்கூடியதாகவும், அதே நேரத்தில் முதலாளி வர்க்கத்தை மாற்றி அமைக்கக் கூடியதாகவும் இருக்குமானால், நல்ல எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு எப்பொழுதும் இருக்கும்; இதில் ஒத்துழைப்பை ஆட்சியாளர் எந்த நேரத்தில்—எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தீர்மானிக்கப்படவேண்டும்; 'எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் — ஒத்துழைக்கவேண்டும்,' என்று கேட்கிறார்களே தவிர, எந்த நேரத்தில்—எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தெளிவுபடவில்லை; நான் கருதுகிறேன்—திட்டத்தைத் தீட்டும் நேரத்தில் ஒத்துழைப்பைக் கேட்டால் நலமாயிருக்கும்; நாங்களும் ஒத்துழைப்புத்தர தயாராக உள்ளோம்; இராமாயணத்திலிருந்து மேற்கோள் காட்டினால் இங்குள்ளவர்கள் திருப்தி அடைவார்கள் என்ற எண்ணத்தில் சொல்கிறேன்—அணில்கூட அல்லவா இராமனுக்குப் பாலம் கட்ட உதவி புரிந்துள்ளது—அந்த முறையில் இந்த அண்ணாதுரையும் பயன்படக் கூடும்; எனவே, திட்டம் தீட்டும் நேரத்தில் கேட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஒத்துழைப்புத்தரும்,' என்று சொல்லி, "வரவு—செலவுத் திட்டத்தில் 'தற்காலிகமாக' வரி விதிக்காத நிதி அமைச்சரை 'தற்காலிகமாக'ப் பாராட்டுகிறேன்" என்று கூறினார்.

# பற்றுக்குறை 'பட்ஜெட்' என்றும் ஆபத்தானது!

## நாட்டை அழிவு நோக்கி இழுத்துச் செல்வதாகும்

### சென்னை வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் சத்தியவாணிமுத்து கருத்துரை

**3—7—57-ல், சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசியபோது குறிப்பிட்ட முக்கியமானதோர் பகுதி இங்கு தரப்படுகிறது; அவரது பேச்சின் மற்றைய பகுதிகள் நாளைய இதழில் வெளிவரும்.**

நிதி அமைச்சரின் வரவு-செலவுத் திட்டத்தை நான் எதிர்க்கவும் இல்லை; அதே நேரத்தில் அதை ஆதரிக்கவும் முன்வரவில்லை. ஆரம்பத்திலேயே அவர் இளங்கோ அடிகளைப் போல. 'மாமழை போற்றுதும் மாமழைப் போற்றுதும்' என்கிறபடி பருவ மழையைப் பாராட்டி, அதன் மூலமாக, பெய்த மழை மக்களுக்கு பலன் அளிக்காமல், மந்திரியை 'பட்ஜெட்' நெருக்கடியிலிருந்து காப்பாற்றி இருக்கிறதே தவிர, மக்களுக்கு யாதொரு பலனும் ஏற்படவில்லை என்பதை அவரும் ஒப்புக்கொள்கிறார்.

"அவர் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம் பற்றுக்குறையாக இருப்பது பற்றி நான் குறை கூற விரும்பவில்லை; சில சமயங்களில் பற்றுக்குறையாக இருக்கலாம்; ஆனால் கடந்த 10 ஆண்டு காலமாக காங்கிரசு, இந்திய உபகண்ட ஆட்சியில் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களையே சமர்ப்பிப்பதைக் காண்கிறோமே தவிர, மிச்சப்படுத்திய திட்டத்தைச் சமர்ப்பிக்க முன்வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்

"தொடர்ந்து இப்பேர்ப்பட்ட பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களையே சமர்ப்பித்துக் கொண்டு வந்தால், நாடு சுடுகாடு ஆகிவிடும் மக்கள் அல்லலுறநேரிடும்."

"இம்மாநில சர்க்கார் செய்து வருகின்ற செலவினங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் நமக்கு உள்ளபடியே வேதனையாகத்தான் இருக்கிறது. செலவினங்கள் இருக்கத்தான் வேண்டும்; அதிலும் முற்போக்கு எண்ணத்தோடு இருக்கின்ற மக்கள் ஆட்சியிலே புதிய புதிய திட்டங்கள் தீட்டுவதற்கு புதிய செலவினங்களை ஏற்கத்தான்வேண்டும்; அதையும் நாங்கள் தவறாகச் சொல்லவில்லை.

"மக்கள் மீது வரியைப்போட்டு அதன் மூலமாக பெருவாரியான பணத்தைத் திரட்டி ஆட்சி நடத்துகின்ற சர்க்கார், செலவினங்களின்கீழ் பணத்தைப் பாழாக்கினால், மக்களுடைய கஷ்டங்கள் அதிகரிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

## சிந்திக்கிறார்களாம்!

ஆலைகளில் தானாக இயங்கும் கதிர்களைப் பிரிட்டன், ஜப்பான், மற்றும் பல நாடுகளிலிருந்து வாங்குவது பற்றி இந்தியப் பேரரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறதாம்; அதற்குப் பணமும் உடனடியாக வினியோகம் செய்யப்படமாட்டாதாம்.

## நெல்லிக்குப்பத்திலா காகிதத் தொழிற்சாலை?

### பரிசீலனை நடத்தவில்லையாம்!

'தென்னாற்காடு மாவட்டம்—நெல்லிக்குப்பத்தில் பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை ஒன்று நிறுவதற்கானவழி வகைகளைப்பற்றி பரிசீலனை நடத்தவில்லை"

என்று, மேல் சட்ட மன்றத்தில் கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினாராம் கைத்தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன்.

மேலும் அவர்,

கிடைக்கக் கூடிய மூலப்பொருள்களைகொண்டு கொள்ளுக்கு, 50 டன் அச்சிடும் காகிதமும் எழுதும் காகிதமும் உற்பத்தி செய்யக் கூடிய ஓர் ஆலையை, தனியார் துறையில் பவானி சாகரில் துவக்கலாமென யோசனை கூறப்பட்டிருப்பதாகவும் சொன்னாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.